## தேர்வுக்கான பாடப் பகுதிகள்:

தரம் 1

எனக்குத் தமிழ் படிக்கத் தெரியும்
நாம் சூழலைத் தூய்மையாக வைத்திருக்க வேண்டும்.
எனக்கு இரண்டு கண்கள் உள்ளன.
எனது கால்களில் பத்து விரல்கள் உள்ளன.
ஆடு, கோழி, மாடு, வாத்து முதலியன பண்ணை விலங்குகள் ஆகும்.
விலங்குகளைப் பேணி வளர்க்கும் இடம் பண்ணை எனப

தரம் 2

நான் அம்மாவுடன் பாடசாலைக்குச் செல்வேன்.
விலங்குக் காட்சிச்சாலையில் பல விலங்குகளை நாம் பல
விலங்குகளைக் காணலாம்.
நாம் உலகில் உள்ள பல விலங்குகளை அங்கு பார்க்கலாம்.
அங்கு காவலர்களும் பணியாளர்களும் மிகப் பொறுப்போடு
பணிபுரிகின்றனர்.
அவற்றை நாம் பொருத்தமான பெட்டிகளில் இட வேண்டும்.

வகுப்பு 3

வேலைப்பழு, கடும் உழைப்பு, பதற்றம் முதலியன எமது உடலையும் உள்ளத்தையும் சோர்வு அடையச் செய்கின்றன.

உடல், உள ஓய்வுக்காகவும் மகிழ்ச்சிக்காகவும் நாம் விரும்பிச் செய்யும் செயல்கள் பொழுதுபோக்குகள் எனப்படும்.

அது விரைவாக ஓடக் கூடிய ஒரு விலங்கு ஆகும். சிறுத்தை புற்று, புதர் போன்றவற்றுக்குப் பின்னால் பதுங்கி இருக்கும்.

நோயற்ற நிறைவாழ்வு வாழ வேண்டும்.

தரம் 4

படுக்கை அறையை அடிக்கடி கூட்டித் துப்பரவு செய்யவேண்டும்.

நீரில் வாழும் விலங்குகளை உப்பு நீரில் வாழ்வன, நன்னீரில் வாழ்வன எனப் பிரிக்கலாம்.

வீட்டுக்கழிவுகளை நீர்நிலைகளில் கொட்டக் கூடாது. நிலநெய்க் கப்பல்கள் விபத்துக்கு உள்ளாகாமல் காக்க வேண்டும்.

அரிமா (சிங்கம்) எட்டிப் பார்த்தது. அதன் நிழல் நீரில் தெரிந்தது. கிணற்றில் குதித்தது.

தரம் 5

நடத்தல், ஓடுதல், நீந்துதல், நடனமாடுதல், விளையாடுதல், ஈருருளி ஓடுதல் முதலியன எளிதாகச் செய்யக் கூடிய உடற்பயிற்சிகள் ஆகும்.

மக்கள் நடமாட்டத்துக்கும் பொருட்களைக் கொண்டு செல்லவும் கீழை நாடுகளில் மாடுகளைப் பயன்படுத்துகின்றனர்.

கழிவு அகற்றுவோர் இவற்றை எளிதாக எடுத்துச் செல்லக்கூடிய முறையில் உரிய கொள்கலனில் சேர்த்தல் எமது கடமை ஆகும்.

தமது குழந்தைகளின் பிஞ்சுக் கைகளால் துழாவப்பட்ட சோறு அமிழ்தத்தை விட இனிமை உடையது.

தரம் 6

தரம் நிலம், நீர், வான், வளி என்பன எம்மைச் சூழ்ந்து உள்ளன. இவை மாசு அடைந்தால் எமது நலத்துக்குக் கேடு வரும்.

புலிகள் ஆசியக் காடுகளில் வாழ்கின்றன. தந்தம் பெற யானைகள் கொல்லப்படுகின்றன.

காட்டில் இருந்து மரம் கிடைக்கின்றது. வணிக நோக்கங்களுக்காக மரங்கள் வெட்டப்படுகின்றன. மரப்பயன்பாட்டை முடிந்தளவு குறைக்க வேண்டும்.

படிக்கப் படிக்க நல்ல நூலின் சிறப்பு உயர்ந்து இன்பம் தரும். அதுபோல், பழகப் பழக பண்புடையவர் நட்பும் இன்பம் தரும்.

தரம் 7

பிறர் உதவியை நாடி இருப்போரை அறிந்து உதவுதல் நல்லது. மொழிச் சிக்கலால் துன்புறுவோர், வழி தெரியாமல் இடர்ப்படுவோர் முதலியோருக்கு உதவ வேண்டும்.

மருந்து வகைகளைக் கண்டுபிடிப்பதற்கும் மருத்துவ அறிவியல் ஆய்வுக்கும் விண்வெளி ஆய்வுக்கும் மக்கள் விலங்குகளைப் பயன்படுத்துகின்றனர்.

போர் நடக்கும் போது நச்சுக் குண்டுகள் அணுக் குண்டுகள் வீசப்படுகின்றன. நிலநெய்க் கிணறுகள் தீப்பற்றுகின்றன. இவற்றால் சூழல் மாசு அடைகின்றது.

தரம் 8

ஒருவரது நல்வாழ்வு அவரது தன்மதிப்பையும் தன்னம்பிக்கையையும் பொறுத்தே அமையும். நாம் செய்வனவற்றை விடாமுயற்சியோடும் விழிப்போடும் செய்தல் வேண்டும்.

இற்றைக்கு 6.5 கோடி ஆண்டுகளுக்கு முன்னர், இறுதியாக ஏற்பட்ட ஐந்தாவது மாபெரும் அழிவு நிகழ்ந்துள்ளது. இவ்வழிவு இறுதிச் சுண்ணக் கற்காலத்துக்கும் தொடக்க காலத்துக்கும் இடையில் நடைபெற்றுள்ளது.

மனமார உண்மை பேசுபவர், தவமும் தானமும் செய்பவரை விடச் சிறந்தவர்.